[8th April 1960

வந்தது. அதன் சார்பில்தான் நானும் இந்தச் சபைக்கு வந்தேன். அப்பொழுதே என்னை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்தது என்பதை கனம் அமைச்சருக்குத் தெரிவித்துவிட்டு கேள்விக்குத் தொடர்ச்சியாக அப்பொழுது ஷிப்டு முறையை ஆதரித்துத்தான் வந்தோம். என்று சொல்லுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: The hon. Member can put his supplementary question also.

Mr. SPEAKER: The hon. Member is giving personal explanation. He can put his supplementary question.

Sri A. GOVINDASAMY: I always obey the Chair.

The Hon. Sri C. SUBRAMANIAM: Can he do otherwise, Sir.

Sri A. GOVINDASAMY: தகப்பன் தொழிலை பாதி நேரத்தில் பிள்ளைகளும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் திட்டம் வந்ததைத்தான் இந்த திராவிட முன்னேற்றக் கட்சி எதிர்த்தது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணருவார்கள். அதன் காரணமாகத்தான் அப்பொழுதுள்ள மந்திரி சபை மாற்றி அமைக்கப்பட்டது என்பதை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: மந்திரி சபையே அமைக்கப் படவில்லை. காங்கிரஸ் மந்திரி சபைதான் தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (சிரிப்பு) அப்பொழுதுள்ள கல்வித் திட்டத்தின் அம்சங்களில் சிலவற்றை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் அதைப்பற்றி புனராலோசனை செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அதன் பிறகு ஷிப்ட் முறையைப் பற்றியும் பரிசீலனை செய்தார்கள். அப்படிப் பரிசீலனை செய்த பிறகு ஷிப்ட் முறை வேண்டாம் என்கிற முடிவுக்கு எல்லோரும் வந்தார்கள். அதன் பிறகுதான் அதை மாற்றி அமைத்தார்கள்.

Sri P. G. KARUTHIRUMAN: தகப்பன் தொழிலை மகன் செய்வது குற்றமாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER: The Hon. Minister need not answer.

The Hon. Sri C. SUBRAMANIAM: தகப்பன் தொழிலை மகன் செய்வது குற்றமா இல்லையா என்பது அவரவர்களுடைய கருத்தைப் பொருத்தது. அதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. அது தனிப்பட்ட கருத்து.

Sales tax on diesel oil

* 630 *Q*.—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to reduce the sales tax on diesel oil; and

(*b*) if so, when?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri A. A. RASHEED: Sir, in view of the increase in excise duty on diesel oil, will the Government reconsider the decision and reduce the sales tax on diesel oil?

8th April 1960]

THE HON. SRI R. VENKATARAMAN: The Government considered this matter very carefully and in view of the difficulties involved in the prevention of evasion of tax, the Government are not able to do anything in this matter.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: During war time permit system was introduced when petrol was supplied to motorists. Similarly will the Government consider the desirability of introducing the permit system for issuing diesel oil at least to the agriculturists in view of the fact that so many agriculturists are affected?

THE HON. SRI R. VENKATARAMAN: This matter was very carefully examined by the Board of Revenue and it was felt that permit system in this case would also lead to abuse. If we try to strictly enforce the permit system there will be a lot of harassment. So Government have decided not to make any changes in the sales tax in respect of agricultural uses even though they sincerely feel that there is a case for relief.

SRI A. A. RASHEED: May I know whether the Government have recommended to the Union Government the reduction of excise duty in view of the high sales tax?

THE HON. SRI R. VENKATARAMAN: Inter-governmental communications are not generally given out.

Railway Project

* 631 *Q.*—SRI M. P. SARATHI: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் ஆரம்பப் பரிசீலனை (Preliminary survey) செய்யப்பட்ட புதிய இருப்புப் பாதை போடும் திட்டங்கள் எத்தனை உள்ளன? எவை எவை?

(ஆ) கடலூர்-சேலம் இருப்புப் பாதையை (Broad guage) ஆக விரிவு படுத்த மத்திய அரசாங்கத்திடம் கோரப்பட்டு உள்ளதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Our information is that preliminary survey has been completed for only one project in this State, viz., Salem-Bangalore line.

(*b*) No, Sir.

SRI M. P. SARATHI: வேலூர் - காஞ்சீபுரம் போக்கு வரத்து ரயில்வே பாதையை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு ஸ்கீம் தயாரிக் கப்பட்டு வந்தது. அது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எடுத்துக்கொள்ள சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முன்பே ஒரு முறை இந்த அரசாங்கம் அதைப்பற்றி சிபாரிசு அனுப்பியபோது அந்தத் திட்டமும் சேர்க்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து அதை அவர்கள் பின்பற்றவில்லை. அதை இப்பொழுது எடுத்துக் கொள்வதாகவே இல்லை.

SRI P. G. MANICKAM: அரக்கோணம் - ஈரோடு மார்க்கத்தில் இரட்டை இருப்புப் பாதை போடுவதாக ஆரம்பிக்கப்பட்டதே அந்த வேலை இன்னும் எவ்வளவு காலத்தில் பூர்த்தியாகும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரி டபிள் லைன் போடுவதாக எனக்குத் தகவல் இல்லை. அது அவசியமாக இருப்பதாகவும் எனக்குத் தகவல் இல்லை. அதைப் பற்றித் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.